
# சுங்க முரசு

இ்ஃது, ஒரு பத்தாண்டு காலம், சுங்கத்துறையின் சுவர்களும் வாசித்த மக்கள் நேசித்த, இலக்கியத் தேடலின், காலப்பெட்டகம். ஒரு கலைக்குழு அமைக்க வேண்டுமாய், எண்ணத்தை வித்தாய் தூவியவர், அற்றை நாள் மதீப்பீட்டு அதிகாரி, துணை ஆணையராகப் பணி நிறைவு பெற்ற, அமரர் பாலகுருநாதன் அவர்கள். அதனை நினைவில் நிறுத்தி, செயல் வடிவுக்குத் தூண்டிய நண்பர் திரு **கோ. பா. உன்னிக் கிருஷ்ண** னோடு, இப்பயணம் தொடரத் துணை நின்றவர்கள், **திரு நா. கிரிபிரசாத், திரு சு.இரவிச்சந்திரன்**. சில ஆண்டுகளில் திரு கிரிபிரசாத் விலக, நண்பர் திரு **மு. ஜெயசங்கர் ஐந்தாம் ஆண்டில்** இணைந்து கொண்டார். அத்தகைய இலக்கியத் தேடலுக்கு, ஊக்கப் படுத்தி, இதனையொரு கையெழுத்து ஏடாக மலர ஊக்கமளித்தவர், அற்றைநாள் ஆட்சியர், மேனாள், சுங்க, கலால் வரித்துறை வாரியத்தின் தலைவ ராயிருந்து, பணி நிறைவு கண்ட, திருமிகு. **ஆர். கோபால்நாதன்** அவர்கள் . அதன் பின் அந்நிலையிலேயே தொடர்ந்த திருமிகு **சுகுமார் சங்கர்** அவர்கள்.



அத்தகையதோர் ஊக்கம் எங்களுக்கு தொடர்ந்து கிடைத்தது. எங்களது ஆண்டு விழாவில், மிகுதிக்கண் பங்கேற்றவரும், அதனை ஓர் அலுவலக விழாவைப் போல் செயல் படுத்தியவரும் திருமிகு **எஸ். செந்திவேல்** அவர்களாகும். ஆட்சியராகவும் இருந்து ஆணைய ராகவும் இருந்தவர். ஒரு விழா மேடையில், நண்பர் திரு ஜெயசங்கரின் கோரிக்கையை ஏற்று, முதன் முதலாக, நமது சுங்கத் துறையில், **சுங்க இல்லம்** என்று தமிழில் பெயர்ப்பலகை அமைத்தவர் திருமிகு **எஸ். செந்திவேல்** அவர்களே! **கவிஞர் திரு சா. மாணிக்கவாசகம்** ஆணையாரக இருந்த காலத்திலும், சுங்கமுரசை ஊக்கப் படுத்தியுள்ளார். அவரது காலத்திலும் ஓர் ஆண்டு விழா நிகழ்ந்தது. எண்ணிறந்த நண்பர்கள், படியெடுத்தல், மற்றவரைப் படிக்கச் செய்தல், விழாநாளில், செயல் படுதல் என துணை நின்றனர். சிறிது காலத்துக்குப் பின் அது தட்டச்சு ஆனது. தட்டச்சுப் பணியை செய்தவர் நண்பர் திரு **மு. ஜெயசங்கர்**. சிறிது காலத்துக்குப் பின் ஒளியச்சுக் கோவை செய்தோம்! திரு **எஸ். இரவிசெல்வன் (தற்போதைய ஆணையர்)**, திரு **எஸ். சங்கரவடிவேலு**, திரு **M. துரைக்கண்ணன்** ஆகிய அப்போதையத் துணை ஆணையர்களும், விழாவில் பங்கு கொண்டு மகிழ்வித்தார்கள். திரு எம். துரைக்கண்ணன், சுங்கமுரசுக்கு வண்ணத்தில் அட்டை செய்து கொடுக்கச் செய்தார். **வடிவன்** ஆகிய திரு **கா.வி. ஸ்ரீனிவாச மூர்த்தி**, அந்நாள் மதிப்பீடு அதிகாரி,பின்னாளில், உதவி ஆட்சியராக, விருப்ப ஓய்வு கண்டவர், எங்களுடன், படைப்பாளியாகவும், சுவைஞராகவும் பயணித்து ஊக்குவிதார்.






மிகுதிக்கண் படியெடுத்தலில் துணைபுரிந்தவர்கள் **திருமதி முத்து லஷ்மி ரங்கநாதன்**, **திருமதி T.E. இராதா** ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். கெழுதகை நண்பர், உதவி ஆணையராகப் பணிநிறைவு பெற்ற **திரு ஜின்னாவும்**, இணை ஆணையராகப் பணி நிறைவுப் பெற்ற **திரு D.K. அரசு** ஆகியவர்கள் விழா நாட்களில் துணை நின்றுள்ளனர். திரு **V.K. ஸ்ரீதர்**, **திரு P வெங்கடேஸ்வரன்**, திரு **வீ. கோவிந்தன்**, திரு **P.K. இராதாகிருஷ்ணன்** போன்று இன்னும் சில நண்பர்களின் பங்களிப்பு இதன் பயணத்தில் உண்டு. படைப்பாளர்களின் பட்டியல் தொடங்கின் நீளும். திருமதி **மாலினி பாலாஜி**, திருமதி **ஜீ. மேகலா**, திரு **கே. சங்கரநாராயணன்**, இப்படி இன்னும் பலர். சிறிது காலத்துக்கு முன் ஒரு விபத்தில் காலமான **கி. கண்ணனும்** தன்னை எட்டாம் ஆண்டின் இடையில் ஆசிரியர்க் குழுவில் இணைத்துக் கொண்டு பணியாற்றினார். எட்டாம் ஆண்டின் தொடக்கத்தில், ஆசிரியர்க் குழுவில் இணைந்த திரு **எஸ்.விசுவநாதன்**, பணியினின்று விலகியதால் ஆசிரியர்க்குழுவிலிந்து விலகினார்.













ஒவ்வொரு ஆண்டு விழாவிலும், நல்ல படைப்பாளிகளை பேராசிரியர் அல்லது ஆசிரியர் மூலம் தேர்வு செய்து, ஒவ்வொரு வகைக்கும், கதை, கவிதை ஓவியம் என பரிசுகள் ஒவ்வோர் ஆண்டின் முடிவிலும் ஆண்டு விழா நடத்தி, பரிசுகள் வழங்கி வந்தோம். அங்கனம் முதலாம் ஆண்டு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த **கவிஞர் பொன்னடியான்**, இரண்டாம் ஆண்டு தொடங்கி, இறுதி வரையில், ஒவ்வோர் ஆண்டுக்கான, பரிசுநூல்களைத் தானே வழங்கினார்.



இப்படியாக வளர்ந்த எங்கள் முரசம், படைப்பாளர்களற்று, பயணம் போகும் ஒரு நிலையை எய்தி, பத்தாண்டு நிறைவில் தனது பயணத்தை முடித்துக் கொண்டது. அதன் பின்னும் அதனை மின்னிதழாகக் கொணர்ந்தோம். ஒரு மூன்றாண்டுகாலம், புதுப்பித்து வைத்திருந்தும், படைப்பாளர்களின் பங்களிப்பு இல்லாததால், அதுவும் நிறைவைக் கண்டது.





